# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## ஊழல் எதிர்ப்பு (திருத்தம்)

### 2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, ஊழல் எதிர்ப்புச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்

---

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர் அவர்களால்
2026 ஓகத்து மாதம் 19 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது

(2026 யூலை மாதம் 27 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)

பாராளுமன்றத்தால் அச்சிடப் பணிக்கப்பட்டது

---

[78 ஆம் சட்டமூலம்]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : ரூபா 87.00 தபாற் செலவு : ரூபா 150.00

இச்சட்டமூலத்தை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யமுடியும்

**சட்டப்பயன் பற்றிய கூற்று**

***வாசகம் 2 :*** இவ்வாசகம் (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் 26 ஆம் பிரிவைத் திருத்துகின்றதென்பதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயன் தற்காலிகமாக அல்லது நிரந்தரமாக ஆணைக்குழுவுக்கு மாகாண பகிரங்க சேவையின் அல்லது பொலிசுப்படையின் அலுவலர்களையும் ஊழியர்களையும் நியமிப்பதற்கு ஏற்பாடுகளைச் செய்வதுமாகும்.

***வாசகம் 3 :*** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 67 ஆம் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயன் நீதிவான் நீதிமன்றங்களில் கோப்பிடப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை மீளப் பெறுவதற்கு பணிப்பாளர் தலைமை யதிபதியினை இயலச் செய்வதற்கு ஏற்பாடுகளைச் செய்வதுமாகும்.

***வாசகம் 4 :*** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 70 ஆம் பிரிவைத் திருத்து கின்றதென்பதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயன் தவறு தொடர்பாக அவரது அறிவுக்குட்பட்ட பூரணமான சூழ்நிலைகள் பற்றிய முழுமையான அல்லது உண்மையான வெளிக்காட்டுகையொன்றை செய்கின்ற நிபந்தனையின்மீது முதன்மைச் சட்டவாக்கத்தின் பாகம் III இன் ஏற்பாடுகளின்கீழ் குற்றஞ்சாட்டப்பட்ட துணையாளியொருவருக்கெதிராக குற்றஞ்சாட்டாதிருப்பதற்கு அல்லது குற்றவழக்கு தொடுக்காதிருப்பதற்கு பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அதிகாரமளிப்பதற்கு ஆணைக்குழுவை இயலச் செய்வதற்கு ஏற்பாடு களைச் செய்வதுமாகும்.

***வாசகம் 5 :*** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 79 ஆம் பிரிவைத் திருத்துகின்ற தென்பதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயன் அவர்களின் சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் விதித்துரைக்கப்பட்ட வெளிப்படுத்துகைகளைச் செய்வதற்கு எவ்வாளுக்கு பாகம் II ஏற்புடையதாகின்றதோ அவ்வாள் ஒவ்வொருவருக்கும் இயலச் செய்வதற்கு ஏற்பாடுகளைச் செய்வதுமாகும்.

***வாசகம் 6 :*** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 80 ஆம் பிரிவைத் திருத்துகின்ற தென்பதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயன் –

(1) முதன்மைச் சட்டவாக்கத்தின் சிங்கள மொழிபெயர்ப்பிலுள்ள பிழையொன்றை சரிப்படுத்துவதுமாகும்;

(2) நியதிச்சட்ட குழுக்களின் பணியாட்டொகுதி அலுவலர்களை உள்ளடக்கு வதுமாகும்;

(3) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் ஏற்புடையற் பாலதான ஏற்பாடுகளை உள்ளடக்குவதுமாகும்;

(4) ஆயிரத்துக்கும் மேற்பட்ட பதிவுசெய்யப்பட்ட உறுப்பினர்களுடன் தொழிற்சங்கங்களின் நிறைவேற்றுநர்களுக்கு இப்பிரிவின் ஏற்பாடுகளை ஏற்புடையனவாக்குவதுமாகும்;

(5) பகிரங்க உத்தியோகத்தருக்கு செய்யப்பட்ட திருத்தத்துக்கு விளைவாந் தன்மையாக்குவதுமாகும்;

(6) ஏற்பாட்டினை துல்லியமாகச் செய்வதற்கு தவிசாளர்கள், பணிப்பாளர்கள் மற்றும் பணியாட்டொகுதி அலுவலர்களை உட்புகுத்துவதுமாகும்;

(7) ஊடக கம்பெனிகளின் தனியுரிமையாளர்கள், தவிசாளர்கள் மற்றும் பணிப் பாளர்களை உள்ளடக்குவதுமாகும்; அத்துடன்

(8) முதன்மைச் சட்டவாக்கத்தின் சிங்கள மொழிபெயர்ப்பிலுள்ள பிழையொன்றை சரிசெய்வதுமாகும்.

***வாசகம் 7 :*** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 81 ஆம் பிரிவைத் திருத்துகின்ற தென்பதுடன் அதன் (உ) என்னும் பந்தியை நீக்குவதன் மூலம் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயன் எவ்வாட்கள் அத்தகைய ஆளின் அந்தரங்கத் தன்மையை பாதுகாப்பதற்கு வெளிப்படுத்துநருக்கு முழுமையாக அந்நியமானவர்களாவிருக்கின்றார்களோ அவ்வாட் களை விலக்குவதுமாகும்.

***வாசகம் 8 :*** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 82 ஆம் பிரிவைத் திருத்துகின்ற தென்பதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயன் நடைமுறைச் சிரமங்களை சரிப்படுத்துவதற்கு ஏற்பாடுகளைச் செய்வதுமாகும்.

***வாசகம் 9 :*** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 84 ஆம் பிரிவைத் திருத்துகின்ற தென்பதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயன் அக்கறை முரண்பாடுகள் பற்றிய கருமங்களை புலனாய்வு செய்வதற்கு ஏற்பாடுகளைச் செய்வதுமாகும்.

***வாசகம் 10 :*** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 85 ஆம் பிரிவைத் திருத்துகின்ற தென்பதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயன் பிரிவின் ஏற்பாடுகளுக்கு கம்பெனிகளின் பதிவாளரை உள்ளடக்குவதுமாகும்.

***வாசகம் 11 :*** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 88 ஆம் பிரிவைத் திருத்துகின்ற தென்பதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயன் பிரிவின் ஏற்பாடுகளைத் தெளிவுபடுத்துவதும் சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் வெளிப்படுத்துநர்களின் அந்தரங்கத் தன்மையை பாதுகாத்தலுமாகும்.

***வாசகம் 12 :*** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 89 ஆம் பிரிவை நீக்கி மாற்றீடு செய்கின்றதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயன் தெளிவுபடுத்தலை செய்வதுமாகும்.

***வாசகம் 13 :*** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 90 ஆம் பிரிவைத் திருத்துகின்ற தென்பதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயன் ஆண்டு வெளிப்படுத்துகைக்கு அல்லது ஓய்வுபெற்ற பின்னரான வெளிப்படுத்துகைக்கு இப்பிரிவின் ஏற்பாடுகளை ஏற்புடையனவாக்குவதுமாகும்.

***வாசகம் 14 :*** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 91 ஆம் பிரிவைத் திருத்துகின்ற தென்பதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயன் முதன்மைச் சட்டவாக்கத்தின் எல்லா ஏற்பாடுகளுக்கும் ஏற்புடையற்பாலதாக இப்பிரிவின் ஏற்பாடுகளைச் செய்வது மாகும்.

***வாசகம் 15 :*** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 92 ஆம் பிரிவைத் திருத்துகின்றதென்பதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயன் முதன்மைச் சட்டவாக்கத்தின் சிங்கள மொழிப்பெயர்ப்பின் பிழையொன்றை சரிபடுத்துவதுமாகும்.

***வாசகம் 16 :*** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 111 ஆம் பிரிவைத் திருத்துகின்ற தென்பதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயன் ஊழல் வரும்படியொன்றாக கொள்ளுதல் செய்யப்பட்ட அல்லது மாற்றப்பட்ட ஏதேனும் ஆதனத்தின் பெறுமதியை

அரசாங்கத்துக்கு பெறுகின்றதும் குற்றஞ்சாட்டப்பட்ட தேதியிலிருந்து ஊழலின் விளைவொன்றாக எவரேனும் ஆளினால் பெறப்பட்ட ஏதேனும் மானியம், நியமனம், நன்மை அல்லது அனுகூலத்தினை சட்டவிரோதமானதாக ஆக்குவதுமாகும்.

***வாசகம் 17 :*** இவ்வாசகம் 149 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு மாற்றீடு செய்கின்றதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயன் அரசாங்கத்துக்கு ஐநூறாயிரம் ரூபாவுக்குக் குறையாத இழப்பொன்றை ஏற்படுத்துவதில் சந்தேகிக்கப்படுகின்ற ஆளொருவர் தொடர்பில் பிணை ஏற்பாட்டின் ஏற்புடைமை தொடர்புடைய வேறுபாடொன்றை செய்வதுமாகும்.

***வாசகம் 18 :*** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 162 ஆம் பிரிவின் பகிரங்க உத்தியோகத்தர் மற்றும் அட்டவணையிடப்பட்ட நிறுவனம் என்பவற்றின் வரைவிலக்கணங்களைத் திருத்துகின்றதென்பதுடன் பகிரங்க உத்தியோகத்தர்கள் மற்றும் அட்டவணையிடப்பட்ட நிறுவனங்களுக்கு ஏற்புடையற்பாலதான ஏற்பாடுகளுக்குச் செய்யப்பட்ட திருத்தங்களுக்கு விளைவாந்தன்மையினதுமாகும்.

***வாசகம் 19 :*** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 163 ஆம் பிரிவைத் திருத்துகின்றதென்பதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயன் 2023, செத்தெம்பர் 15 ஆந் தேதியிலிருந்து தொடங்குகின்ற காலப்பகுதியின் போதும் இச்சட்டத்தின் தொடக்கத்திலிருந்து ஆட்சேர்க்கப்பட்ட சில அலுவலர்களினதும் உத்தியோகத்தர்களினதும் உரிமைகளைக் காத்தலுமாகும்.

ச.வ.-ஓ 7/2026

## 2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, ஊழல் எதிர்ப்புச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப் படுவதாகுக:-

**1.** இச்சட்டம், 2026 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, ஊழல் எதிர்ப்பு (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்

**2.** (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் 26 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:- 2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்கச் சட்டத்தின் 26 ஆம் பிரிவைத் திருத்துதல்

(1) அதன் (5) ஆம் உட்பிரிவில் "பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர் அத்தகைய அலுவலரினதும், பகிரங்க சேவை ஆணைக்குழுவினதும், அத்தகைய அலுவலரின் நியமிக்கும் அதிகாரியினதும் சம்மதத்துடன்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "விடயத்திற்கேற்ப, பகிரங்க சேவையிலுள்ள, மாகாண பகிரங்க சேவையிலுள்ள அல்லது பொலிசுப் படையிலுள்ள எவரேனும் அலுவலர், அத்தகைய அலுவலரினதும் பகிரங்க சேவை ஆணைக்குழுவினதும், மாகாண பகிரங்க சேவை ஆணைக்குழுவினதும் அல்லது தேசிய பொலிசு ஆணைக்குழுவினதும் அத்தகைய அலுவலரின் நியமிக்கும் அதிகாரியினதும் சம்மதத்துடன்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அதன் (6) ஆம் உட்பிரிவில் "பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர்" என்னும் சொற்களுக்குப்பதிலாக"பகிரங்கசேவையிலுள்ள, மாகாண பகிரங்க சேவையிலுள்ள அல்லது

PL 15916 - 172 (2026/08)

பொலிசுப் படையிலுள்ள எவரேனும் அலுவலர்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(3) அதன் (7) ஆம் உட்பிரிவில் "பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர்" என்னும் சொற்களுக்குப்பதிலாக"பகிரங்கசேவையிலுள்ள, மாகாண பகிரங்க சேவையிலுள்ள அல்லது பொலிசுப் படையிலுள்ள எவரேனும் அலுவலர்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

முதன்மைச் சட்டவாக் கத்தின் 67 ஆம் பிரிவைத் திருத்துதல்

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 67 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (1) ஆம் உட்பிரிவில் "புரிந்துள்ளமைக்காக குற்றம்பகரப்பட்டுள்ள ஆளொருவருக்கெதிராக மேல் நீதிமன்றத்தினால்" என்னும் சொற் களுக்குப் பதிலாக "புரிந்துள்ளமைக்காக குற்றம் பகரப்பட்டுள்ள அல்லது குற்றஞ்சாட்டப்பட்டுள்ள ஆளொருவருக்கு எதிராக மேல் நீதிமன்றத்தினால் அல்லது நீதிவான் நீதிமன்றத்தினால்" என்னும் சொற்களையும் மற்றும் "மேல் நீதிமன்றத்தின் அனுமதியுடன், அத்தகைய குற்றஞ்சாட்டப் பட்டவருக்கு எதிரான குற்றப்பகர்வை மீளப் பெறலாம்." என்னும் சொற்களுக்குப் பதிலாக "மேல் நீதிமன்றத்தின் அல்லது நீதிவான் நீதிமன்றத்தின் அனுமதியுடன் அத்தகைய குற்றஞ் சாட்டப்பட்டவருக்கு எதிராக குற்றப்பகர்வை அல்லது குற்றப்பத்திரத்தை மீளப்பெறலாம்." என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அதன் (2) ஆம் உட்பிரிவில் "குற்றப்பகர்வை" என்னும் சொற்களுக்குப் பதிலாக "குற்றப்பகர்வை அல்லது குற்றப்பத்திரத்தை" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(3) அதன் (3) ஆம் உட்பிரிவில் "குற்றப்பகர் வொன்றை" என்னும் சொற்களுக்குப் பதிலாக

"குற்றப்பகர்வொன்றை அல்லது குற்றப் பத்திரமொன்றை" என்னும் சொற்களையும் மற்றும் அதன் பந்தி (i) இல் "மேல் நீதிமன்றத்தின் முன்னர்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "மேல் நீதிமன்றத்தின் அல்லது நீதிவான் நீதிமன்றத்தின் முன்னர்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(4) அதன் (4) ஆம் உட்பிரிவில் "புதிய குற்றப் பகர்வொன்றை" என்னும் சொற்களுக்குப் பதிலாக "புதிய குற்றப்பகர்வொன்றை அல்லது புதிய குற்றப்பத்திரமொன்றை" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன் "மூலக் குற்றப்பகர்வில்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "மூலக் குற்றப்பகர்வில் அல்லது மூலக் குற்றப்பத்திரத்தில்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(5) அதன் (5) ஆம் உட்பிரிவில் "புதிய குற்றப்பகர் வொன்றைக்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "புதிய குற்றப்பகர்வொன்றை அல்லது புதிய குற்றப்பத்திரமொன்றைக்" என்னும் சொற் களை இடுவதன் மூலமும்; அத்துடன் "மூலக் குற்றப்பகர்வில்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "மூலக் குற்றப்பகர்வில் அல்லது மூலக் குற்றப்பத்திரத்தில்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(6) அதன் ஓரக்குறிப்பை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் ஓரக்குறிப்பை இடுவதன் மூலமும்:-

"குற்றப்பகர்வொன்றை அல்லது குற்றப் பத்திரம் ஒன்றை மீளப்பெறுதல்".

முதன்மைச் சட்டவாக் கத்தின் 70 ஆம் பிரிவைத் திருத்துதல்

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 70 ஆம் பிரிவானது அதன் (1) ஆம் உட்பிரிவில் இத்தால் திருத்தப்படுகின்றது:-

(1) “இலஞ்சத்துக்குக்” என்னும் சொற்களை நீக்குவதன் மூலமும்; அத்துடன்

(2) “அதன்கண் பெயர்குறிப்பிடப்பட்ட எவரேனும் நீதிவானுக்கு,” என்னும் சொற்களுக்குப் பதிலாக “பணிப்பாளர் தலைமையதிபதிக்கு” என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக் கத்தின் 79 ஆம் பிரிவைத் திருத்துதல்

**5.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 79 ஆம் பிரிவானது “2 ஆம் பிரிவுக்கமைய,” என்னும் சொற்களுக்குப் பதிலாக “2 ஆம் பிரிவுக்கமைய,” என்னும் சொற்களையும் எண்ணையும் அத்துடன் அதன் (அ) என்னும் பந்தியில் “எல்லா பகிரங்க உத்தியோகத்தர்களுக்குமுள்ள அவர்களின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் காலாகால வெளிப்படுத்துகைகளைச் செய்யும்படி” என்னும் சொற்களுக்குப் பதிலாக “இப்பாகம் எந்த ஆளுக்கு ஏற்புடையதாகின்றதோ அந்த ஆள் ஒவ்வொருவரும் அவர்களின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் விதித்துரைக்கப்பட்ட வெளிப்படுத்துகைகளைச் செய்யும்படி” என்னும் சொற்களை இடுவதன் மூலமும் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக் கத்தின் 80 ஆம் பிரிவைத் திருத்துதல்

**6.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 80 ஆம் பிரிவானது அதன் (1) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) பந்தி (ஐ) இல் “அட்டவணைப்படுத்தப்பட்ட,” என்னும் சொல்லுக்குப் பதிலாக “அட்டவணைப் படுத்தப்பட்ட” என்னும் சொல்லை இடுவதன் மூலமும்;

(2) பந்தி (ஒ) வில், “அமைச்சுக்கள் மற்றும் அரசாங்க திணைக்களங்களிலுள்ள பணியாட்டொகுதி அலுவலர்கள்” என்னும் சொற்களுக்குப் பதிலாக

"அமைச்சுக்கள், அரசாங்க திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்டக் குழுக்களின் பணியாட் டொகுதி அலுவலர்கள்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(3) பந்தி (ங) வில், "அரசியலமைப்பின் 41அ (1) (இ) என்னும் உறுப்புரையின்கீழ் அல்லது ஏதேனும் நியதிச்சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "அரசியலமைப்பின் 41ஆ என்னும் உறுப்புரைக்கான அட்டவணையில் குறித்துரைக் கப்பட்ட" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(4) பந்தி (ம) வில், "தொழிற்சங்கங்களின் நிறை வேற்றுனர்கள்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஆயிரத்துக்கும் மேற்பட்ட பதிவு செய்யப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட தொழிற்சங்கங்களின் நிறைவேற்றுநர்கள்;" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(5) பந்தி (ர) வில், "இருபத்தைந்து" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஐம்பது" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(6) பந்தி (ல) வில், "முகாமைத்துவ அல்லது மேற்பார்வைசார் வகிபாகங்களிலுள்ள பணியாட் டொகுதியினர்;" என்னும் சொற்களுக்குப் பதிலாக "தவிசாளர், பணிப்பாளர்கள் மற்றும் பணியாட்டொகுதி அலுவலர்கள்;" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(7) பந்தி (இஇ) வினை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

"(இஇ) வெகுசன ஊடகம் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்டவரும் 1991 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, இலங்கை தொலைத்தொடர்பாடல்கள் சட்டத்தின் 22 ஆம் பிரிவின்கீழ் உரிமம் பெற்ற வருமான அமைச்சரின் அமைச்சில் பதிவு செய்யப்பட்ட ஊடகக் கம்பெனிகளின் உரிமையாளர்கள், தவிசாளர்கள் மற்றும் பணிப்பாளர்கள்;" ; அத்துடன்

(8) பந்தி (ஈஈ) வில், "1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, விளையாட்டுக்கள் சட்டத்தின் நியதிகளின்படி தாபிக்கப்பட்ட" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, விளையாட்டுக்கள் சட்டத்தின் பாகம் III இன் கீழ் பதிவுசெய்யப்பட்ட" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 81 ஆம் பிரிவைத் திருத்துதல்

**7.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 81 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (இ) என்னும் பந்தியில் "சொத்துக்களும் பொறுப்புக்களும்;" என்னும் சொற்களுக்குப் பதிலாக "சொத்துக்களும் பொறுப்புக்களும்; அத்துடன்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அதன் (ஈ) என்னும் பந்தியில் "சொத்துக்களும் பொறுப்புக்களும்; அத்துடன்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "சொத்துக்களும் பொறுப்புக்களும்." என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(3) அதன் (உ) என்னும் பந்தியினை நீக்குவதன் மூலமும்.

**முதன்மைச் சட்டவாக்கத்தின் 82 ஆம் பிரிவைத் திருத்துதல்**

**8.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 82 ஆம் பிரிவானது அதன் (3) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப் படுகின்றது:-

(1) "முதலாவது வெளிப்படுத்துகையைச்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "முதலாவது வெளிப் படுத்துகையை மற்றும் ஓய்வு பெற்ற பின்னரான வெளிப்படுத்துகையைச்" என்னும் சொற்களையும் அத்துடன் "செய்தல் வேண்டும்" என்னும் சொற்களிலிருந்து "உள்ளடக்குதல் வேண்டும்" என்னும் சொற்கள் வரையான எல்லா சொற்களுக்கும் பதிலாக "செய்தல் வேண்டும்" என்னும் சொற்களையும் இடுவதன் மூலமும்;

(2) அத்தகைய உட்பிரிவிற்கான காப்பு வாசகத்தில் "முதலாவது வெளிப்படுத்துகையைச்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "(1) ஆம் உட்பிரிவின் (அ) மற்றும் (இ) என்னும் பந்திகளில் குறித்துரைக் கப்பட்ட வெளிப்படுத்துகையைச்" என்னும் சொற் களையும் எண்களையும் இடுவதன் மூலமும்.

**முதன்மைச் சட்டவாக் கத்தின் 84 ஆம் பிரிவைத் திருத்துதல்**

**9.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 84 ஆம் பிரிவானது அதன் (3) ஆம் உட்பிரிவில் "கள்ளத்தனமான முறையில் செல்வந்தராதல்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "கள்ளத் தனமான முறையில் செல்வந்தராதல் அல்லது அக்கறை முரண்பாடு ஒன்று" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

**முதன்மைச் சட்டவாக் கத்தின் 85 ஆம் பிரிவைத் திருத்துதல்**

**10.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 85 ஆம் பிரிவானது அதன் (2) ஆம் உட்பிரிவில் "சுங்கத் திணைக்களம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "சுங்கத் திணைக்களம், கம்பனிப் பதிவாளர் திணைக்களம்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக் கத்தின் 88 ஆம் பிரிவைத் திருத்துதல்

**11.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 88 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (1) ஆம் உட்பிரிவில் –

(அ) பந்தி (இ) வினை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியினை இடு வதன் மூலமும்:-

"(இ) பிறந்த திகதி, தேசிய அடையாள அட்டை இலக்கம், கடவுச்சீட்டு இலக்கம் அல்லது வெளிப்படுத் துகையில் குறிப்பிடப்பட்ட தனியாட் களை அடையாளங்காணும் நோக் கத்திற்காக இயைபான அதிகார சபையினால் ஏற்றங்கீகரிக்கப்பட்ட வேறு ஏதேனும் இலக்கம்.";

(ஆ) பந்தி (ஈ) வில் "இலக்கங்கள்; அல்லது;" என்னும் சொற்களுக்குப் பதிலாக "இலக் கங்கள்;" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(இ) பந்தி (உ) வில் "விபரங்கள்;" என்னும் சொற்களுக்குப் பதிலாக "விபரங்கள்; அல்லது" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(ஈ) பந்தி (உ) வினை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியினை சேர்ப்பதன் மூலமும்:-

"(ஊ) விதித்துரைக்கப்படக் கூடிய வாறான தனியாளினது அந்தரங் கத்தன்மையை மீறுவதாக மத்திய அதிகாரசபை கருதக்கூடியதான வேறு ஏதேனும் தகவல்; " ; அத்துடன்

(2) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவினை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவினை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(1அ) (அ) வேறு எவரேனும் ஆளின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக் கள் பற்றிய வெளிப்படுத்துகை ஒன்றின் மறைக்கப்பட்ட பதிப்பை பெற்றுக் கொண்ட ஆள் ஒருவர் அத்தகைய வெளிப்படுத்துகையை 86 ஆம் பிரிவின் கீழ் எவரேனும் அலுவலருக்கு அல்லது ஏதேனும் நிறுவனத்துக்கு சமர்ப்பிப்பதை தவிர வேறு ஏதேனும் நோக்கத்திற்காக அத்தகைய வெளிப்படுத்துகையை பயன் படுத்தலாகாது.

(ஆ) வேறு எவரேனும் ஆளின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றிய வெளிப்படுத்துகை ஒன்றின் மறைக்கப்பட்ட பதிப்பை, அத்தகைய ஆளின் அந்தரங்கத்தன்மையை மீறும் வகையில் பயன்படுத்தப்படுகின்ற ஆள் ஒருவர் தவறொன்றைப் புரிந்தவர் ஆவார் என்பதுடன் நீதிவான் ஒருவரினாலான சுருக்கமுறையான விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப் பணமொன்றிற்கும் அல்லது ஒரு வருட காலப்பகுதியை விஞ்சாத மறியற் றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதல் வேண்டும்."; அத்துடன்

(3) அதன் (2) ஆம் உட்பிரிவினை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

"(2) மத்திய அதிகாரசபையானது அதனது பணிகள் தொடங்கியதிலிருந்து மூன்றுமாத காலப்பகுதியினுள் 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் 23 ஆம் பிரிவின்கீழ் சொல்லப்பட்ட சட்டத்தின் நோக்கங்களுக்காக தகவல் அலுவலரையும் மற்றும் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட அலுவலரையும் நியமித்தல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக் கத்தின் 89 ஆம் பிரிவைத் திருத்துதல்

**12.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 89 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

"தேர்தல் களுக்கான வேட்பாளர் களினால் சொத்துக்களும் பொறுப்புக்களும் பற்றிய வெளிப்படுத் துகைகளை சமர்ப்பித்தல்

**89.** எண்பதாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ய) என்னும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட தேர்தலுக்காக வேட்பாளர் ஒவ்வொருவரும், அத்தகைய வேட்பாளரின் நியமனப்பத்திரங்களுடன் சேர்த்து தேர்தல்கள் ஆணையாளருக்கு சொத்துக்களும் பொறுப்புக்களும் பற்றிய வெளிப்படுத்துகையின் பிரதியொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 90 ஆம் பிரிவைத் திருத்துதல்

**13.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 90 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (1) ஆம் உட்பிரிவில், "சொத்துக்களும் பொறுப்புக்களும் பற்றிய வெளிப்படுத்துகைகள்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஆண்டு வெளிப்படுத்துகை அல்லது ஓய்வுபெற்ற பின்னரான வெளிப்படுத்துகை" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அதன் (3) ஆம் உட்பிரிவில், "வேண்டும்." என்னும் சொல்லுக்குப் பதிலாக, "வேண்டும்.

குற்றப்பணமானது விடயத்துக்கேற்றவாறாக, ஊதியத்தின் அல்லது ஓய்வூதிய நன்மையின் மீதான மிகைக்கட்டணமொன்றாகவிருத்தல் வேண்டும்." என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(3) அதன் (4) ஆம் உட்பிரிவில், "பற்றிய வெளிப்படுத்துகையை" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பற்றிய வெளிப்படுத்துகையின் பிரதி யொன்றைச்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(4) அதன் (9) ஆம் உட்பிரிவில், "ஆறாம் அல்லது (7) ஆம் உட்பிரிவின்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "ஐந்தாம், (6) ஆம் அல்லது (7) ஆம் உட்பிரிவின்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

**14.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 91 ஆம் பிரிவு, "இச்சட்டத்தின் பாகம் I இன் கீழ்" என்னும் சொற்களுக்கும் எண்ணுக்கும் பதிலாக, "இச்சட்டத்தின் கீழ்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக் கத்தின் 91 ஆம் பிரிவைத் திருத்துதல்

**15.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 92 ஆம் பிரிவு, "செலவினம் மற்றும் இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே நேரடியாக அல்லது பயன்பெறுமுகமாக சொந்தமாகக் கொள்ளப்பட்ட அக்கறைகள்" என்னும் சொற் களுக்குப் பதிலாக, "செலவினம் மற்றும் இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே நேரடியாக அல்லது பயன்பெறுமுகமாக சொந்தமாகக் கொள்ளப்பட்ட அக்கறைகள்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக் கத்தின் 92 ஆம் பிரிவைத் திருத்துதல்

**16.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 111 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

முதன்மைச் சட்டவாக் கத்தின் 111 ஆம் பிரிவைத் திருத்துதல்

(1) அதன் (1) ஆம் உட்பிரிவாக அப்பிரிவை மீள் இலக்கமிடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அதன் மீள இலக்கமிடப்பட்ட (1) ஆம் உட்பிரிவை உடனடுத்து அப்பிரிவின் (2) ஆம் மற்றும் (3) ஆம் உட்பிரிவுகளாக இலக்கமிடப்படவேண்டிய பின்வரும் உட்பிரிவுகளைச் சேர்ப்பதன் மூலமும்:-

"(2) ஆளொருவர் (1) ஆம் உட்பிரிவின் கீழ் குற்றத்தீர்ப்பளிக்கப்படுகின்றவிடத்து, அத்தகைய உட்பிரிவின் கீழ் குற்றப் பணமொன்றை விதிப்பதற்கு மேலதிகமாக, நீதிமன்றமானது எவ் ஏதேனும் ஆதனம் அத்தகைய ஊழலின் வரும்படியொன்றாகக் கொள்ளுதல் செய்யப்பட்டிருக்கின்றதோ அல்லது மாற்றப்பட்டிருக்கின்றதோ அவ் ஏதேனும் ஆதனத்தின் பெறுமதியின் மூன்று மடங்கை விட குறையாத அல்லது ஏதேனும் இழப்பு அத்தகைய ஊழலின் காரணமாக அரசாங்கத்துக்கு ஏற்படுத் தப்பட்டிருக்கின்றவிடத்து, நீதிமன்றத்தினால் இழப்பாகத் தீர்மானிக்கக்கூடிய தொகையை தண்டமொன்றாக விதித்தல் வேண்டும்:

ஆயின், இவ்வுட்பிரிவின் கீழ் விதிக்கப் பட்ட ஏதேனும் தண்டம் நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட குற்றப்பணமொன்றாக அற விடப்படுதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின் வேறேதேனும் ஏற்பாட்டில் முரணாக எது எவ்வாறி ருப்பினும், பகிரங்க உத்தியோகத்தர் (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஊழல் தவறுக்கு குற்றத்தீர்ப்பளிக்கப்படுகின் றவிடத்து, ஊழலின் விளைவொன்றாக பகிரங்க உத்தியோகத்தரொருவரினால்

அல்லது வேறெவரேனும் ஆளினால் கொள்ளுதல் செய்யப்படுகின்றதும் குற்றத்தீர்ப்பின் தேதியன்று அத்தகைய பகிரங்க உத்தியோகத்தரினால் அல்லது அத்தகைய வேறு ஆளினால் தொடர்ந்தும் அனுபவிக்கப்படுகின்றதுமான அருவத் தன்மையொன்றிலான (சொத்து தவிர்ந்த வேறெதுவும்) ஏதேனும் மானியம், நியமனம், நன்மை அல்லது அனுகூலம் அத்தகைய தேதிக்கு முன்னர் நிறைவேற்றப்பட்ட ஏதேனும் அலுவலகசார் செயல்களுக்கு பங்கமின்றி குற்றத்தீர்ப்பின் தேதியிலிருந்து சட்டமுறையாகவிருப்பதற்கு இல்லாதொழிதல் வேண்டும்.".

**17.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 149 ஆம் பிரிவு அதன் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:- முதன்மைச் சட்டவாக் கத்தின் 149 ஆம் பிரிவைத் திருத்துதல்

"(1) இச்சட்டத்தின்கீழான எல்லா தவறுகளும் 1997 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, பிணைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க பிணையளிக் கப்படக்கூடியதாகவும் பிணையளிக்க முடியாத வையாகவும் இருத்தல் வேண்டும்:

ஆயின், ஆளொருவர் ஒரு இலட்சம் ரூபாவுக்குக் குறையாத இலஞ்சமொன்றைப் பரிந்து கேட்டல், ஏற்றுக்கொள்ளுதல் அல்லது முனைகின்றமைக்காக சந்தேகிக்கப்படுகின்ற விடத்து அல்லது குற்றஞ்சாட்டப்படுகின்ற விடத்து அல்லது ஊழல் தவறொன்றைப் புரிவதன் மூலம் ஐந்து இலட்சம் ரூபாவுக்குக் குறையாத இழப்பொன்றை அரசாங்கத்துக்கு ஏற்படுத்தியிருக்கின்றவிடத்து அல்லது சான்றிதழொன்றினை வழங்குவதன் மூலம்

பணிப்பாளர் தலைமையதிபதியினால் உறுதிப் படுத்தப்படுகின்ற பெறுமதி தாமாக அல்லது வேறெவரேனும் ஆள் ஐந்து இலட்சம் ரூபாவுக் குக் குறையாத நன்மையொன்றை, சாதக மொன்றை அல்லது அனுகூலமொன்றை பெற்றிருக்கின்றவிடத்து, அத்தகைய சந்தேகிக் கப்படுபவர் அல்லது குற்றஞ்சாட்டப்படுபவர் மேல் நீதிமன்றமொன்றினாலான விதிவிலக் கான சந்தர்ப்பங்களில் தவிர பிணையளிக் கப்படுதலாகாது.”.

முதன்மைச் சட்டவாக் கத்தின் 162 ஆம் பிரிவைத் திருத்துதல்

**18.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 162 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) “பகிரங்க உத்தியோகத்தர்” என்னும் வரை விலக்கணத்தில் “இருபத்தைந்து சதவீதத்துக்கு மேற்பட்டவை” என்னும் சொற்களுக்குப் பதிலாக, “ஐம்பது சதவீதத்துக்கு குறையாதவை” என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) “அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனம்” என்னும் வரைவிலக்கணத்தில் “இருபத்தைந்து சதவீதத்துக்கு” என்னும் சொற்களுக்குப் பதிலாக, “ஐம்பது சதவீதத்துக்கு” என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(3) “பதவிநிலை உத்தியோகத்தர்” என்னும் வரை விலக்கணத்தில் “பகிரங்க கூட்டுத்தாபனத்தின் எவரேனும் ஊழியர்” என்னும் சொற்களுக்குப் பதிலாக, “2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட எவ் ஏதேனும் கம்பெனியின் பங்குகளின் ஐம்பது சதவீதத்துக்குக்குறையாதவைஅரசாங்கத்தினால் அல்லது பகிரங்க கூட்டுத்தாபனமொன்றினால் வைத்திருக்கப்படுகின்றனவோ அவ் ஏதேனும்

கம்பெனி ” என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 163 ஆம் பிரிவைத் திருத்துதல்

**19.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 163 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (2) ஆம் உட்பிரிவின் (ஏ) என்னும் பந்தியின் (i) என்னும் உட்பந்தியில் “இருபது” என்னும் சொல்லுக்குப் பதிலாக, “பத்து” என்னும் சொல்லை இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அதன் (2) ஆம் உட்பந்தியை உடனடுத்து பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலமும்:-

“(2அ) 1994 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட ஆணைக்குழுவுக்காக அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட அத்தகைய பதவிகளுக்காக 2023, செத்தெம்பர் 15 ஆந் தேதியிலிருந்து தொடங்குகின்றதும் மற்றும் இச்சட்டத்தின் தொடக்கத்திலிருந்துமான காலப்பகுதியின்போது ஆணைக்குழுவுக்கு ஆட்சேர்க்கப்பட்டிருக்கின்றதும் மற்றும் 2023 செத்தெம்பர் 15 ஆந் தேதிக்கு முன்னர் வெற்றிடமாக தொடர்ந்திருக்கப்பட்டிருந்ததுமான ஒவ்வொரு அலுவலரும் உத்தியோகத்தரும் அவர்கள் ஆணைக்குழுவுக்கு ஆட்சேர்க்கப்பட்டிருக்கின்ற போதான நேரத்தில் அவர்களுக்கு உரித்தாக்கப்பட்டிருந்த ஊழியத்துக்கான நியதி நிபந்தனைகளைவிட சாதகம் குறையாத நியதிகளின் மேல் ஆணைக்குழுவின் அலுவலர்களாகவும்

உத்தியோகத்தர்களாகவும் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் அவர்கள் ஆணைக் குழுவின் சேவையில் தொடர்ந்திருப்பதற்கு விருப்பு தெரிவிக்கின்றார்களாயினுஞ்சரி அல்லது இல்லையாயினுஞ்சரி இச் சட்டம் தொடங்குவதிலிருந்து மூன்று மாதங்களினுள், ஆணைக்குழுவுக்கு அறியத்தருதலும் வேண்டும் :

ஆயின்-

(i) இப்பிரிவின் (2) ஆம் உட் பிரிவின் (ஏ) (i) என்னும் பந்தி யின் ஏற்பாடுகள் எவ் அத்த கைய அலுவலர் அல்லது உத்தியோகத்தர் ஆணைக்குழு வின் சேவையில் இருப்பதனை தொடரலாமோ அவ் எவரேனும் அத்தகைய அலுவலர் அல்லது உத்தியோகத்தரின் ஓய்வூதியம் மற்றும் வேறு நன்மையை கணக்கிடும் நோக்கத்துக்காக ஏற்புடையதாகவிருத்தல் வேண் டும்; அத்துடன்

(ii) இப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஏ) (ii) என்னும் பந்தியின் ஏற்பாடுகள் இச்சட்டம் தொடங்கும் தேதிக்குப் பின்னர் ஆணைக்குழுவின் அத்தகைய அலுவலரின் அல்லது உத்தியோகத்தரின் சேவையை தொடர விரும்பாத எவரேனும் அலுவலருக்கு அல்லது உத்தியோகத்தருக்கு ஏற்புடையதாதல் வேண்டும்.".

**20.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களம்.